உ

வெற்றிவேலுற்ற துணை.

ராமாயண கதாம்சமாகிய

நவரஸ சங்கீத நாடக ரஞ்சித

# சுலோசனை சரித்திரம்.

திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு.

இவை,

சுவாமிமலை முருகானந்தகவி

மதுரதாஸ் அவர்களால்

இயற்றியது.

இஃது,

ஷெயூர்

ஸ்ரீ ஷண்முக விலாஸ ஆத்மானந்த சபா

நாடகக் கம்பெனியார்கள்

விருப்பத்தின்பேரில்,


பெ. ஆறுமுக முதலியாரால்

சென்னை:

முரஹரி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.



ரிஜிஸ்டர் காப்பி ரைட்.



இதன் விலை) 1921. (அணா 2.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது, யாதெனில்,— சுவாமிமலை - முருகானந்த கவி மதுர தாஸ் அவர்களால் இயற்றிய "சுலோசனை சரித்திரம்" என்னும் புத்தகத்தை வெண்தமிழ் நடையாக எழுதினதை பெ. ஆறுமுக முதலியாராகிய எனக்கு சகல சுதந்திரம் கொடுத்துவிட்ட படியால் இதை என் அனுமதி யில்லாமல் இதரமானவர்கள் எவ்விதத்திலாகிலும் அச்சிடலாகாதென கனம்பொருந்திய கவர்ன்மெண்டார் சட்டப்படிக்கு ரிஜிஸ்டர் காப்பிரைட் செய்யப்பட் டிருக்கிறது.

இப்படிக்கு,

பெ. ஆறுமுக முதலியார்.

உ

சிவமயம்.

## விளம்பரம்.

வித்தியாப் பியாசிகளுக்கு தெரிவிப்பது யாதெனில்:—

எமது புத்தகசாலையில் அனேகவித சரித்திரங்கள், திருப்புகழ், காவடிச்சிந்து வர்ணமெட்டுகளில் எழுதி அச்சிட்டிருக்கிறோம். தேவையானவர்கள் அடியிற்கண்ட விலாசதாரருக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகங்கள் தேவையானவர்கள் வேண்டிய புத்தகங்களின் விலைக்குத் தகுந்த போஷ்டு பிள்ளைகள் வாங்கி கவரில் வைத்து அனுப்பினால் உடனே நீர்கோரிய புத்தகத்தை அனுப்புவோம். தபால் பிள்ளைகள் அனுப்பாமல் அனுப்பச்சொல்லி எழுதினால் நாங்கள் அனுப்ப வி. பி. சார்ஜி 1-புத்தகத்திற்கு 5-அணா வாகும். அதனால் மேற்சொன்னபடி தபால் பிள்ளைகள் அனுப்பினால் நாங்கள் நட்பெட் போஷ்டாக அனுப்புவோம். நீங்கள் அவ்விடத்தில் 1-அணா குடுத்து வாங்கிக்கொள்ளவும். அப்படி அனுப்பினால் புத்தகம் உங்களுக்கு பத்திரமாக சேரும்.

வேண்டியவர்கள் உங்கள் விலாசத்தை விவரமாய் எழுதவும்.

இப்படிக்கு,

பெ. ஆறுமுக முதலியார்.

4-வது கெம்பர் 2-வது சந்து, பெருமாள்கோவில் தோட்டம் மதராஸ்.

உ

ஸ்ரீ சுவாமிநாதன் துணை.

---

ராமாயண கதாம்சமாகிய

நவரஸ சங்கீத நாடக ரஞ்சித

# சுலோசனா சரித்திரம்.

## திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு.

### விநாயகர் துதி.

வெண்பா.

அதல சேடன் புதல்வி யாகிய சுலோசனைதன்
கதையை யொரு சரிதமென கனிந்துரைக்க—உதவிசெயும்
தந்திமுகன் ஐந்துகரன் றன்கமலச் செஞ்சரணம்
சொந்தமென சந்ததமும் சொல்.

---

### சரஸ்வதி துதி.

விருத்தம்.

தண்முளரி மலரிலுறை சாரதாநின் தாளிணைக்கே
சரணமெனச் சாற்றி யுன்னை
பன்முறையும் யான்துதிக்க நீதா னென்னை
பாராம லிருப்பதுவும் பகரொணாத
கன்மனது வுனக்கிருக்கி லெளியனேனுக் கருள்புரிய
யெவ ருளரிங் கருணைவல்லாய்
நன்மனது வைத்துயிது தருணமென்றன் நாவிலிருந்
துதவிசெயும் நளின வாழ்வே.

---

## சுலோசனை

## நந்தவனத்திற்குச் சேடியருடன் வருதல்.

ஆயனபி வாரிச் சலோ என்ற வர்னமேட்டு.

### கண்ணிகள்.

1 தோழியர்கா ளேகழ்பூஞ் சோலைக்கே வாரீர்
சொரி மதுவினை தருநறு மலர்
விரிவன மிதைப் பாரீர் தோழி

2 ஆழிநிக ரோடைபுன லாடுவோமெ லோரும்
அணி மணிதுகி லினை யினைவொடு
அனைவரும் கொண்டு வாரும் தோழி

---

## வ ன க் க ா க்ஷி.

இங்கிலீஷ் நோட் ஏகதாளம்.

1 பரிமளமிகு மலர்வன மிதை
பார்க்க ஆசை மீறுதே

2 விரி மலரிடை குளிர் மணமிக
வீசுதே மனங் கூசுதே
விந்தைமிக விந்தையே
விலகாத வென் சிந்தையே

முடுகு.

விமரிசை யுடனதில் குமுகுமு வெனவரும்
வெடித்த ஜெண்பக வாசமே
நமதுள மகிழுற வனமதி லிதுதகி
நடிக்கலாம் வுல் லாசமே பரி

---

## திக்விஜயத்தின் பொருட்டு வந்த இந்திரஜெயித்தன் நந்தவனத்தில் சுலோசனையைக் கண்டு வர்ணித்தல்.

சித்திரக் கட்டினிலேரி என்ற வர்னமெட்டு.

பல்லவி.

வாலைப்பருவ சிங்காரி இவள்
சிலை மாரனுங் கண்டு வணங்கும் ஒய்யாரி வா

மணக்குமலர் வனத்தினிடை தனித்துலவு மெனக்கினிய வா

விலையிற்படு கயலுக்கிணை சுழல்வச்சிர விழியுற்றவள் வா

மழைபொழி கரு முகலிருளென
குழலெி லிடைநறு மதுரணிசிறு வா

வஞ்சியிவ ளின்சொ லினல்
கொஞ்சி சர ஸஞ் செயுவாள் வா

அநுபல்லவி.

ஆலைக் கரும்பைவில் லாகக் கையிற்கொண்டு
அங்கஜனும் எதிராக வந்து நின்று
வாளி தொடுத் தென்னை வாட்டுகிறு னின்று
வஞ்சி யிவளைச் சேர்ந்தாலே சுக முண்டு
மன்றலர் நந்த வனந்தனி
லின்றிவள் சிந்தை மகிழ்ந்தெனை
மருவிப்பல வித கலவிகள்
புரிதர்க்கிவள் சரி யெனகரி
மத்தகத்தி னிற்பெருத்த டர்த்துயர்த்த னத்தையுற்ற வா

## சுலோசனையிடம் இந்திரஜெயித்தன் பெருமை கூறுதல்.

### பொன்னுலவும் பன்னிருகை என்ற வர்ணமெட்டு.

1 தென்கடலி லங்கைபதி காரன் பல
தேவர்களுக் கேவல் சொலுந் தீரன் பூவிற்
றேமிகுந்த ராவண னெம் பீரன் தங்கச்
சிரமொருபது கரமிருபது
முடையவனுல கினில் பிரபலன்
சித்தமகி ழுத்தமகு மாரன் உலகை
திக்விஜயம் சுற்றிய வொய் யாரன் தென்

2 இந்திரனா டமர்செய் தேனே ஜெயித்
திந்த்ரஜெயித் தென்பெயர்கொண் டேனே பின்பு
இங்குவர வுந்தனைக் கண் டேனே பாவி
யெதிரிலையென மதன்விடு மலர்
பகழியிலென தகமெலிகுற
தேந்திழையே சாந்தகுண மானே எனைச்
சேர்ந்திடிலென் பார்ந்திடுவே னானே தென்

---

## இந்திரஜெயித்தன் காதலுடன் வார்த்தையாடக்கண்டு சுலோசனை சொல்லுதல்.

### ஷை வர்ணமெட்டு.

சங்கையின்றி யெந்தனிடம் வாது மொழி
சாற்றுவதை யேற்றிடத் தகாது பழி
சாருமிடர் நேருமேதப் பாது என்றன்
தந்தையர றிந்திடிலுன்
றன்சிரம றிந்திடுவர்
தப்பிமறைந் துப்பிழை யல் லாது மிக
சஞ்சலமா குந்தெரிவி ரீது

---

## சுலோசனைக்கும், இந்திரஜெயித்தனுக்கும், தர்க்கம்.

பாலாபிஷேக என்ற வர்னமெட்டு.

இங். வாலிப காலமீ தானதி லுன்மேல்
மைய லாகினேன் மருவ வாடி

சுலோ. ஏலாத வார்த்தை யியம்பு கிறீர்மதி
இல்லையோ மாந்தர்க் கிதுவோ டேடி

இங் சல்லாப மான தருணமே வாடி
தாமத மேனோ சரசியே லேடி

சுலோ. நில்லாதீ ரிம்மொழி சொல்லாது போவீர்
நின்று லெந்தன்பழிக் கேநீரா ளாவீர்

ஹ ஜ ல்.

இங். மானேயெ னைசைக்கண் மணியே வுனக்கேற்ற
மண வாள னென யறிகுவாய்

சுலோ. வீணாக யெந்தனொடு விபரீத வார்த்தைகள்
விளம் பினுவி டாறி குவீர்

மு டு கு.

இங். மலரணை மிசையிரு வருமகிழ் வாக
சலவிகள் செயகல தருண முத்சாக

சுலோ. பலமுறை புகலினு மெனதெதிர் வாது
பகருத லழகல பழிவரு மீது

இங். வஞ்சியே வுன்காதல் மிஞ்சி வந்தேனே
கொஞ்சியென் னேடுவா தஞ்செய்வ தேனே

---

## வேறு தர்க்கம்.

கூட்டுறவுபேசி என்ற வர்னமெட்டு.

இங். மலரணை மிசை கூடி அக
மகிழ்ந் திருக்கலாம் வாடி
மானேயினி யானே உன்
மையல் சகிக் கேனே

சுலோ. அறிவழி ந்தனிர் மூடா அன்ப
மடைகு வா யெட்டி போடா
ஆசை பெரும் மோசம் வீண்
அழிந்தி டாதே நாசம்

இந். தடுத் துரைப்பதேன் மானே இனி
தாம தம்செ யிற் ருனே
தானேன் மோகம் நானே கொஞ்சம்
தயவு செய் நீ தானே

சுலோ. செய்வ தேனினி தர்க்கம் மிக
தீங் குறும் குதர்க்கம்
சீராய் மனே சேராய் என்
சினம் வரும் பழிக் காரா

இந். திக் விஜயம்வந் தேனே இந்த்ர
ஜித்த னென் பவன் யானே
சேராய் முத்தந் தாராய் என்
தேசம் செல்வோம் வாராய்

சுலோசனேயை சிறையெடுத்து
இந்திரஜெயித்தன்
இலங்கைக்குச் செல்கிருன்.

## நாகலோகசபை.

### ஆதிசேடன் மகனேக் காணுது துயரம்.

இராகம்-இந்துஸ்தான் தோடி, தாளம்-ஆதி.

பல்லவி.

ஆ ஹா! நானினி செய்வேன்
அருமைப் புத்திரியைக்கா ணுமே தன்மனம் வாடுதே ஆஹா

சரணங்கள்.

1 பாகுநிகர் மொழியை பகருமென்றன் கண்மணி
பைங்கிளியே வந்தெனைப் பார்ப்பதெங்கே ஆஹா

2 செய்தமுன் றவத்தால் ஜெனித்தவென் சுதையே
சென்றவழி யிதென தெரிந்திலேனே ஆஹா

3 மாதாபிதா வென்கின்ற வாஞ்சையுனக் கில்லையோ
வருந்தவிட்டு நீசென்ற வகையறியேனே ஆஹா

4 சென்ற தெவ்விடமோ தெரியே னையையோ
தெய்வ சோதனையோ திகைக்க விட்டால்.

---

## நாரதர் பிரவேசம். ஆதிசேடன் சொல்லும்

## விருத்தம்.

எதெனப் புகலுவேனிங் கெனக்குள்ள துயரமையோ
மாதவமுனி யேயென்தன் மரையினிற் ஜெனித்தபுத்ரி
யாதொன்று சூதுமில்லா தவள்வனஞ் சென்றுளங்கு
நீதென நேர்ந்ததோபின் சென்றதெவ் விடமோ காணேன்.

---

## நாரதர்

## ஆதிசேடனிடம் சொல்லுதல்.

இராகம்-சுருட்டி-தாளம்.

பல்லவி.

மனத்துயர் நீக்குவாய் மன்ன நந்த
வனத்திற் நடந்ததை வழுத்துவே னின்னாள் மன

சரணம்.

1 குணத்திற் சிறந்தவுன்றன் குலத்திற் பிறந்த மங்கை
வனத்திற் றனிமையாக வந்து நின்றனளங்கே மன

2 இலங்கைக் கதிபன்மகன் இந்த்ரஜெயித்தன் கண்டான்
விளங்கும் வுன்குல புத்ரி மீதே காதல் கொண்டான் மன

2

3 வாதாக யிருவற்கும் வனத்தில் தர்க்கமானதால்
சூதாக வுன்மகளைத் தாக்கி யிலங்கை சென்றான் மன

4 சீர்மிகும் யிலங்கைக்கு சென்று யிருவர்கட்கும்
பேர்பெற மணமாகி பெருமையுட னிருக்கார் மன

## ஆதிசேடன் கோபம்.

இராகம் - அடாணா, தாளம் - ஆதி.

அந்த ராக்ஷத் நிர்மூட னா சாக்ஷிகளெல்லா மழிக்க
லங்கைக்கு சென்று வருவேன்
தாக்ஷண்ய மில்லாது தடை பேச்சொன்றும் சொல்லாது விடை
தருவீர் தருவீர் தருவீர் தருவீர் ராக்ஷ

---

இந்திரஜெயித்தன் சுலோசனையை மணம்புரிந்தமகிழ்ச்சி
யால் இச்சா தானம் கொடுக்கிறானென நாரதர்
ஆதிசேடனிடம் சொல்ல ஆதிசேடன்
கிழரூபங்கொண்டு இந்திரஜெயித்த
னிடம் செல்கிறார்.

## இலங்காபுரி மண்டபம்.

---

இந்திரஜெயித்தனிடம் ஆதிசேடனை கிழரூபி
உயிரை தானப்பொருளாக கேட்குதல்.
இந்திரஜெயித்தன் யுத்தமுனையில்
தருவதாக ஒப்புக்கொள்ளுதல்.

இராகம்-அடாணா, தாளம்-ஆதி.

முடுகு.

மணத்தயி ...த்தொடு சினத்தினை விளைத்திட
வழுத்தனீ ...னக்குயிர் கொடுத்திடு மெனச்சொல

வாசித்தரி வீனத்தன மாயிப்படி நீர்செப்பவும்
யோசிக்கிலே யோசற்றிலும் யாசிக்கவந் தோரிப்படி

யாகுமா மதியாகுமா சொலப்
போகுமா யெளிதாகுமா பெருவதென்றால்

எனக்குப் பெண் கொடுத்தவன் பனிரெண்டு ஆண்டு
உறக்கமும் புசிப்பதும் விலக்கியே மீண்டும்
எதிர்த்தவ னமர்செய்து வுயிர்பெற வேண்டும்

இதுவே நிஜமாம்
அறிவீர் அறிவீர் மன

---

# இராமாயண யுத்தம்.

---

ஆதிசேடன் லக்ஷ்மணராகப் பிறந்து
யுத்தத்திற்கு வருகிறார்.
சுலோசனையிடம்
இந்திரஜெயித்தன் யுத்தத்திற்கு செல்லும்பொருட்டு
விடை கேட்குதல்.

விருத்தம்.

எனக்குநற் சுகமே தீர்ந்து யிரக்ஷிக்க வந்தமாதே
உனைப்பிரிந் தமரிற்சென்று வுளதரி யலரைவென்று
க்ஷணத்தினில் வருவேனுந்தன் திருமுகந் தன்னைநோக்க
மனக்குறை யையாதின்சொல் வழுத்துவாய் விடைநீ தானே.

மானே வுன்னினைவால் என்ற வர்னமெட்டு.

பல்லவி.

இந். கண்ணே வுந்தன்மனம் கலங்குவதேன் ஆசை

அநுபல்லவி.

சுலோ. மன்னா வென் சொல்லுவேன் மனந்துயலுற்ற ஆசை

சரணங்கள்.

இந். சிந்தைவருந்தி யென்முன் றிகைத்து நிற்பதேனடி
சீக்கிரமா யென்னிடம் தெரிவிப்பையோ கண்

சுலோ. பெண்ணு லென்னை மணந்தீர் பிரியமுட னிருந்தீர்
பிரிந்தின்று செல்லுவதேன் ப்ராணநாதா மன்

இந். அமர் களத்திற்கு சென்று அதி சீக்கிரமா வாரேன்
அன்னமே நீ தடைசொல் லாதிருப்பாய் கண்

சுலோ. போன வீரர்களெல்லாம் போர் முனையில் மடிந்தார்
பூபாநீர் செல்ல மனம் பொருத் திருக்கேன் மன்

இந். ஆரணங்கே யான்சென்று அரை நிமிஷத்தில்வாரேன்
அன்புடனே விடை தந் தனுப்பு வையே கண்

சுலோ. ஸ்ரீராம ரோடு யுத்தம் செய்வதென்று லெளிதோ
தீமை நேரிடுமே நீர் செல்ல லாகா மன்

இந். உலகில் மும் மூர்த்திகளும ஓர் வடிவாய் வந்தாலும்
ஒரு கணையால் வதைப்பேன் உண்மையிதே கண்

---

## வேறு தர்க்கம்.

நருமோக முகன் என்ற வர்னமெட்டு.

இராகம்-காகரப்பிரியை, தாளம்-திஸ்ரஜாதி.

முன் பல்லவி முடுகு.

இந். ஒரு நிமிஷ தனிற் சென்று வோடி வருகுவே னின்று
உத்தமியே தயிரியமா
கத் தருவாய் விடையினியே ஒரு

சுலோ. சரியலநீர் புகலுவதே
தடுத் தேகுத லாமோ
சகிக்கே னென் மனத்துயரால்
வகிக்கே னிங் குயிரினிமேல் சரி

தோஹையரா.

இங். பேதமையாலே யென்முன் பிதற்றுராய் மணதைத் தேறு
நாதரே சென்று வாரும் நலமென விடையே கூறு

சுலோ. தங்கள்முன் னியம்புதற்குத் தயங்குதேன் சிந்தை யையோ
மங்கையா னுமையிழந்து மண்மிசை வாழேன் மெய்யே

முடுகு.

இங். ஈரே மூலகத் தோறும் எதிர்த்து வொன்ருய் வரினும்
நீராய்த் தகித்து அறை நிமைதனிலே வருவேன் உத்

நகுமோகமுகன் என்ற வர்னமெட்டு.

சுலோ. விதியிதுவோ மதிகுறைவோ
வினைப் பயனே அறியேன்
வேகு தெந்தன் வயிறுமிக்க
னோகுஞ் சிந்தை யுயிர் தரிக்கேன் சரி

---

## இந்திரஜெயித்து விருத்தம்.

தடுத்துரைப் பதினலிங்கு தங்கிடே னினிமேல் யானே
அடுப்பிலா நெஞ்சனுகும் அடைகுவேன் ஜெயந்தா னின்று
துடித்துளம் வருந்த வேண்டாம் துணைவனுன் மடிந்தாலென்கை
வடித்ததேன் மொழியைக் கூறும் வஞ்சியுன் கரத்திற் காண்பாய்.

(சுலோசனையைப் பிரிந்து சென்று விடுகிருன்.)

## யுத்தகளம். அனுமார் முன்னிலையில் இந்திரஜெயித்தன் மாயா சீதையை வெட்டுதல்.

ஏதோ காட்டவந்த ப்ன்றி என்ற வர்ன்மெட்டு.

பல்லவி.

ஈதோ பாரடா வெட்டுகிறேன் ஈதோ

அநுபல்லவி.

சூதுக்காரி யிவளால் விளைந்த
துன்ப மென்று கண்டு யின்று ஈதோ

சரணம்.

தீதுக் குரிமை யாகவே வந்த
திருடியென் றறிந் தேனினி யிந்த
மாதுக் கிறங்கி லேனி தேவென்கை
வாளா யுதத்தி
லே சிரத்தை

---

அயோத்திக்குப் போக்குக் காட்டி நிகும்பலைக்குச் சென்று யாகஞ் செய்கிறான்.

அதை யறிந்த விபீஷணர் ஸ்ரீராமபிரான் உத்திரவு பெற்று லக்ஷ்மணர் சேனைகளுடன் சென்று யாகத்தை யழித்து இந்திரஜெயித்தன் சிரம் ராமர் பாதத்திலும், கைகள் சுலோசனை கரத்திலும் போய் விழும்படி லக்ஷ்மணப் பெருமாள் பாணந் தொடுத்து வதைத்தல்.

அந்தப்புரம்.

சுலோசனை கைகளில் இந்திரஜெயித்தன் கரங்கள் வந்து விழ புலம்பல்.

சின்னவயதி லிந்தவாதை என்ற வர்னமெட்டு.

கண்ணிகள்.

1 அய்யோ யிந்த விதிக்கோ ஆளானேன் இந்த
அவதி வருமென்றறி யேனே அய்ய

2 மன்னன் வுயிர் தூக்க லாச்சே எந்தன்
மாங்கல்ய மின்றோ டற்றுப் போச்சே அய்

3 ஈசாவி துவுன்றன் சும் மதியோ அல்ல
தென் றலையி லமைத்த விதியோ அய்

4 அன்னை தந்தையை மறந் தேனே என்
னுவியாளனை யிழந் தேனே அய்

5 துன்பத்திற் காளாக நா னிருக்கேன் உயிர்த்
துணைவனைக் காணு துள்ளம் பொருக்கேன் அய்

---

## சுலோசனை மாமியாகிய மண்டோதரியிடம் சென்று தன்னுயகன் சிரசைக் காண்பிக்கும்படி முறையிடல்.

வேசிகள் பிழைப்பது விபரீதமாச்சுது என்ற வர்னமெட்டு.

பல்லவி.

மாமியே என்ன சொல்வேன் மங்கைக்கு நேர்ந்த துயர்
வாயா லுரைக்க வெளிதோ மாமி

சரணம்.

1 பூமிதனிலே யென்னைப் போலும்வோர் பாவியுண்டோ
தேமி வருந்துகின்ற செய்தி தெரிந்த துண்டோ மாமி

2 தந்தை தாயாரை விட்டு தனிமையாய் வந்த என்னை
சொந்தமகள்போல்வைத்து துயர்தீர்த்தாய் நீயே அன்னை மாமி

3 யுத்தத்திற்குச் சென்று,என் னுயிர்த்துணை நாயகரும்
செத்து மடிந்தாரவர் செங்கர மிதோ பாரும் மாமி

---

மண்டோதரி தன்னாலாகாது ராவணனிடம் சென்று கேட்கும்படி சொல்ல ராவணனிடம் சென்று கேட்க ராவணனும் தன்னால் முடியாதென்று சொல்லுகிறான்.

சுலோசனை

தலைவிரி கோலமாக வருவதைக் கண்டு வானர சேனைகளெல்லாம் ராவணன் ஸீதாதேவியை சிறைவிடுத்து விட்டான் ஸீதாதேவிதான் வருகிறாளென்று வழிவிலகி நிற்கிறார்கள்.

விபீஷணரிடம் புலம்பல்.

கண்மணியே பெண்மணியே என்ற வர்னமெட்டு.

கண்ணிகள்.

1 என்னருமை நாயகரை
  யீன்றவற் கிளையவரே
கன்னிகை யானையோ படுங்
  கஷ்டத்தை யகற்றுவீரே.

2 மன்னவர் பகைவர் கையால்
  மாண்டனர் களத்தி லுற்றோ
அன்னவர் சிரசைக் காண
  அனுக்ரகம் செய்வீர் சற்றே.

---

விபீஷணர் லக்ஷ்மணரிடம் அனுப்ப லக்ஷ்மணரிடம் சுலோசனை முறையிடுதல்.

மார்கழி மாதம் திருவாதிரை என்ற வர்னமெட்டு.

1 பார்த்தி யானவென் றுயர்தனை கேட்டுப்
  பாதுகாரு மையா
பாதவித் துணைதுபொற் றிருவடி துணையென
  பணிந்து வந்தேனையா

2 வஞ்சியா ளிச்சிறு வயதிலிக் கோலமுடன்
வாடத் தகுமோ ஐயா
வருந்து மெனது துய ரறிந்து வுனதுதிரு
வருள்செய வேணுமையா

3 நாயகனை யிழந்து நாரி தனித்திருக்க
ஞாய மாமோ ஐயா
நல்ல திது தருணம் வுள்ளமகிழ் தென்மொழி
நம்பியே வாரு மையா

4 பக்ஷமுடைய யெந்தன் நாதன் சிரசைக் கண்ணால்
பார்க்க வேணு மையா
பாரி லெந்தனைக் கண்டு பழிப்பா ரெனைக் காப்பதுன்
பார மாகு மையா

---

## த ர் க் க ம்.

ராமபஜன ஹோலியா என்ற வர்னமெட்டு.

பல்லவி.

சுலோ. வேறே கெதியுமில்லையே என்றுயர் தீர்க்க வே

அநுபல்லவி.

லெக்ஷ். ஆகாதாகா துன்ஜாலமே அறிந்தே னிப்போ தாகாதா

சரணம்.

சுலோ. பாரிற் கொடிய வஞ்ச பாதகி யானை யையோ
வேரற்ற மரம்போல வீழ்ந்து புலம்புகின்றேன் வே

லெக்ஷ். சூர்ப்ப நகைக்கதிக சூதுக்காரி யல்லவோ
பார்ப்பதென்ன வுந்தனை பாசாங்குகாரி நீயே ஆகா

சுலோ. நம்புவீ ரென் மொழியை நான் சூதுக்காரி யல்ல
அன்போ டெனைமணந்த ஆளனைப் பிரிந்தேனே வேறே

லெக்ஷ். மீண்டு மிந்தக் கலகம் விளைவிப்பதற் கல்லவோ
வேண்டி என்னிடம்வந்து வீணய்வாதுசெய்கிறாய் ஆகா

சுலோ. அன்னை தந்தைபிரிந்தேன் ஆசாத்துயரில்நொந்தேன்
மன்னனையு மிழந்து மண்மீதி லிருக்கலமோ வேறே

அச்ச[illegible] யென்னார் அழுது புலம்புகின்றாய்
நிக்ஷயமாகச் சொன்னேன் நிறபதி லாபமில்லை ஆகா

---

## லக்ஷ்மணர் சுலோசனையைத் தூஷித்து வெருட்ட ஸ்ரீராமரிடம் சென்று பிரார்த்திக்கிறாள்.

இராகம்-பைரவி, தாளம்-ஆதி.

பல்லவி.

சமயமீதே கருணை செய்ய
ஜானகி ரமண ஸ்ரீராம சமய

அநுபல்லவி.

கமல பொற்பதமே துணையென்று
கைதொழு மெளியேனைக் காின்று சமய

சரணம்.

உன்னை யல்லாதுவே றுண்டோ கெதியிங்கு
வோதும் பெந்தன் மொழி வுண்மையென் றிதங்கு
மண்ணி லென்னு தன் மடிய யான் கலங்கி
வந்தேன் துயரமறிந் தருளே பொங்கி சமய

---

## ஸ்ரீராமர் மனதிறங்கி லக்ஷ்மணனிடம் சொல்லுதல்

தம்பி பரதா என்ற மெட்டில் வேறு சந்தம்.

பல்லவி.

தம்பி லெக்ஷ்மணா நல்ல
தன்மையுங்குணமும் நிறைந் துண்மைபுகலு மெனது தம்

அநுபல்லவி.

நம்பியே வந்தழு மின் நாரி யடைந்த தொரு
துன்பம தானிவள் துணைவன் சிரசைக் காண தம்

தடுக்காதே வார்த்தை மீறி
நடக்காதே மாதின் ஆசை
கெடுக்காதே யார்க்கு மீது
அடுக்காது சொன்னேன் சொன்னேன் தம்

காட்டுவாய் நாதன் சிரசை
ஓட்டுவாய் இவள் துன்பத்தைக்
கேட்டு வா பெருந்தன் மொழியை
நாட்டுவாய் கீர்த்தியை மேலும் தம்

---

## லக்ஷ்மணர் நீதி சொல்லித் தடுத்தல்.

ஸ்ரீராகம் ஆதிதாளம்.

பல்லவி.

அண்ணா நீ ரறியாததோ இந்த
அரக்கர் பெண் களுக் குள்ள
திருட்டையும் புரட்டையும் அண்

அநுபல்லவி.

முன்னால் சூர்ப்பனகை தன்னால் விளைந்த அமர்
இன்னாள் வரை நடக்க பெண்ணா லிவள் நடத்தை அண்

சரணம்.

கலகத்திற்குக் காரணம் கன்னிகை தானே
வுலகத்தி லிதுசத்யம் வுண்மையென்றேனே
பலகற்ற நீலி யிவள் பசப்பி கண்டேனே

பணிந்து பேசியே பின்பு
துணிந்து யேசுவள் வம்பு அன்

---

# ஸ்ரீராமர், விபீஷணர் முதலிய யாவரும் லக்ஷ்மணரை பிரார்த்தித்து சிரசைக் காண்பிக்கச் சொல்ல லக்ஷ்மணர் சுலோசனையை வுனது நாதன் சிரசை யெப்படி உணரக் கூடுமென்று கேட்க சுலோசனை சொல்லுதல்.

விருத்தம்.

ஆசையோ டெனை மணந்த
ஆளனின் சிரசை யென்னா
வோசையா லெழுப்ப லாகும்
வுருதியென் கற்பி னாலே
யோசனை புரிய வேண்டாம்
வுரைப்பதிற் சூதே யில்லை
காசினி புகழு முங்கள்
கழலிணைப் பணிந்தேன் சுவாமி.

---

# பிறகும் லக்ஷ்மணர் சந்தேகித்து ஸ்ரீராமரிடம் சொல்லுதல்.

விருத்தம்.

வம்புதான் விளைக்க வந்த
மாதிவள் வார்த்தை தன்னை

நம்பியேதேனு மிங்கு
நலமது புரிந்தா லிப்போ
துன்பமே நேரும் கண்டீர்
தோகையா ளிவள் சொல்லாலே
தம்பியா மென்சொல் கேட்பீர்
தாளிணை பணிந்தே னண்ணா

---

## ஸ்ரீராமர் பிறகும் சமாதானம் செய்து சிரசைக் காண்பிக்கச் செய்தல்.

## இரணக்களம்.

## சுலோசனை தன் பர்த்தாவின் சிரசை அழைத்தல் சிரசு எழுந்து கேட்ட கேள்விக்குப் பதிலுறைப்பதும் லக்ஷ்மணருக்கு பூர்வக்யானம் உண்டாகிறது.

### சுலோசனை.

நல்வாக்கு நீ கோடி என்ற வர்னமெட்டு.

1 ஆசைமண வாளரே என்மீ
தன்பாகிய சீலரே
மோசம் செய்து வந்தீரே ஒரு
மொழியாகிலும் சொல் வீரே ஆசை

2 ஆதிசேடன் குலத்தில் மிக
அருமையொடு யான்பிறந்தும்
வேதினைப் படும்படியாய்
விட்டீரையயோ பாவம் ஆசை

3 வனத்தி லிருந்த வென்னை மிக்க
வாதுசெய்து மாலையிட்டீர் இத்
தினத்தில் யானும்வருந்த
செய்தீ ரிதுதர்மமோ ஆசை

4 கற்புதவ ராதிருக்கும்
கன்னிகையை நீரே துக்கோ
வற்புருத்தி மாலையிட்டு
மன்னவரே நீர் மடிந்தீர் ஆசை

5 சின்னவய தான யென்னை
சிர்குலை வோவிடுத்தீர்
மன்னவரே யென்மேல்வைத்த
வாஞ்சைமறந் தோவிடுத்தீர் ஆசை

6 சொன்னதை யெலாந் தடுத்தீர் எனக்கு
துன்பமிகவே கொடுத்தீர்
மன்னவர்க் கிது தர்மமோ
மங்கைபான்செய்த கர்மமோ ஆசை

## லக்ஷ்மணர் தான் பூர்வத்தில் ஆதிசேடனென அறிந்து சோகமுறுதல்.

கைதனிலே கோலேந்தி காவலிங்கு என்ற வர்னமெட்டு.

### கண்ணிகள்.

திரிபுடை தாளம்.

1 என்மகளே கண்மணியே
யேதுசெய் குவேணினியே
வன்மனப் பாவியானுக்குன்
வாழ்வுக்கே இடர்செய்தேனே என

2 பாவியான என்குலத்தில்
பாக்கியமாய் நீபிறந்தும்
கூவிலையோ வென்றழவும்
கொடியனேன் செய்தபழியே என்

3 மக்களைப் பெற்று நீசுக
மாகவாழும் காலமீதில்
துக்கமடையச் செய்யவோ
தோன்றினேன் பழிசுமக்க என்

4 வீட்டிர்க்குங் களையழைத்து
விருந்தளிக்கும் நாளிலுன்னை
காட்டிலே வருந்தவிட்டு
கண்ணிலை காண்பேனோபாவி என்

---

## லக்ஷ்பணரை ஸ்ரீராமர் தேற்றுவதும் தீக்குழி.

### சுலோசனை தன் பர்த்தாவின் உடலோடு தீக்குழியில் இறங்கி விடுகிருள்.

### பொதுவிருத்தம்.

கணவனை யிழந்த மாது
கவலையுற் றழுது நொந்து
புணரிசூற் றுலக மீது
பூவையா னிருந்து வாழேன்
துணைஹரி ராமர் பாத
தூளியா மினிமேல் நிற்கே
னெனவுறைத் திமையே சென்று
இரங்கினள் தீயிற் றனே.

---

## வாழ்த்து.

அத்தி முகவனை நத்தியே என்ற வர்னமெட்டு.

அத்திமுகப் பெருமா னடிக்கு ( வாழியே
சத்திசிவ சங்கரர்பொற் றுளிணைக்கு வாழியே

மங்கை வள்ளி குஞ்சரி மணாளனுக்கு வாழியே
நங்கைலெக்ஷிமி சமேத நாரணர்க்கு வாழியே
தேசமரசாளுமன்னர் செங்கோலுக்கு வாழியே
பேசும் மதுரக் கவிஞன் பேர்சிறக்க வாழியே.

சுபம். சுபம். சுபம்.

சுலோசன சரித்திரம் சம்பூர்ணம்.

---

☞ இதில் தெரியாத வர்ணமெட்டுகள் சுவாமிமலை ஆத்மானந்த சபா ஸ்ரீ பார்ட்டு பஞ்சனத பத்தர் அவர்களிடம் கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம்.

உ

சிவமயம்.

# விளம்பரம்.

வித்தியாப் பியாசிகளுக்கு தெரிவிப்பது யாதெனில்:—

எமது புத்தகசாலையில் அனேகவித சரித்திரங்கள், திருப்புகழ், காவடிச்சிந்து வர்ணமெட்டுகளில் எழுதி அச்சிட்டிருக்கிறோம். தேவையானவர்கள் அடியிற்கண்ட விலாசதாருக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகங்கள் தேவையானவர்கள் வேண்டிய புத்தகங்களின் விலைக்குத் தகுந்த போஷ்டு பிள்ளைகள் வாங்கி கவரில் வைத்து அனுப்பினால் உடனே நீர்கோறிய புத்தகத்தை அனுப்புவோம். தபால் பிள்ளைகள் அனுப்பாமல் அனுப்பச்சொல்லி எழுதினால் நாங்கள் அனுப்ப வி. பி. சார்ஜி 1-புத்தகத்திற்கு 5-அணா வாகும். அதனால் மேற்சொன்னபடி தபால் பிள்ளைகள் அனுப்பினால் நாங்கள் நட்பெட் போஷ்டாக அனுப்புவோம். நீங்கள் அவ்விடத்தில் 1-அணா குடுத்து வாங்கிக்கொள்ளவும். அப்படி அனுப்பினால் புத்தகம் உங்களுக்கு பத்திரமாக சேரும்.

வேண்டியவர்கள் உங்கள் விலாசத்தை விவரமாய் எழுதவும்.

இப்படிக்கு,
பெ. ஆறுமுக முதலியார்.
4-வது நெம்பர் 2-வது சந்து, பெருமாள்கோவில் தோட்டம் மதராஸ்.

கும்பகோணம் - இராமசசந்திரன் இயற்றிய

| | | | |
|---|---|---|---|
| காப்பிக்கும் பழையதுக்கும் சண்டை தேத்தண்ணீர் மத்தியஸ்தம் | 0 | 1 | 0 |
| பாலியப்பெண்கள் தலையணை மந்திரம் இரண்டுபோகம் அடங்கியது | 0 | 1 | 0 |
| பூஜா ராமாயணம் | 0 | 1 | 0 |
| சூர்ப்பணகா பங்கம் டிராமா | 0 | 4 | 0 |
| கிருஷ்ணலீலா டிராமா | 0 | 5 | 0 |
| பாஸ்கரதாஸ்சிடன் வெள்ளைசாமி தாஸரியற்றிய பக்திரசகீர்த்தனை 1-ம் பாகம் | 0 | 5 | 0 |
| ” ” ” ” 2-ம் பாகம் | 0 | 5 | 0 |

சுவாமிமலை S. பொன்னம்பலம்பிள்ளை இயற்றிய

| | | | |
|---|---|---|---|
| திரு ஏரகமென்னும் சுவாமிமலை சுவாமிநாதசுவாமி காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| இராமாயணம் சுந்தரகாண்டம் மாருதி விஜயமென்னும் இலங்காதகனம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு | 0 | 2 | 0 |

சுவாமிமலை கு. ரு. முத்தையாபிள்ளை இயற்றிய

| | | | |
|---|---|---|---|
| பொய்சொல்லா புனிதனெனும் சத்யஅரிச்சந்திர திருப்பு-கா-சிந்து | 0 | 3 | 0 |

மதுரை வித்வான் கலியாணசுந்தரம்பிள்ளை இயற்றிய

| | | | |
|---|---|---|---|
| மன்மதராஜன் சரித்திர லாவணி எரிந்த கக்ஷி 1-க்கு | 0 | 3 | 0 |
| பஞ்சரத்தின திருப்புகழ் மூலமும் உரை | 0 | 3 | 0 |
| எமனை ஜெயித்து சிம்மாசனம் ஏறிய ஓர் அரசகுமாரன் சரித்திரம் என்னும் சித்திரா புத்திரன் கதை | 0 | 6 | 0 |
| ஸ்ரீமத் பரந்தாமன்பேரில் இந்துஸ்தான் வர்னமெட்டு பஜனை ஜாவளிகள் முதல்பாகம் 1-க்கு விலை அணா | 0 | 2 | 0 |
| தாடகை சம்மாரம் டிராமா 1-ம்பாகம் | 0 | 2 | 0 |
| சீதா கலியாணம் பரசுராம பங்கம் டிராமா 2-ம் பாகம் | 0 | 2 | 0 |
| வழிநடை உப்புமாவு பாட்டு | 0 | 1 | 0 |
| சம்பந்திக்கும் மாப்பிள்ளைக்கும் ஏசல் | 0 | 2 | 0 |
| சம்பந்திக்கு சமையல்செய்யும் அப்பளப்பாட்டு | 0 | 1 | 0 |
| பல ஸ்தலங்களின்பேரில் பாடிய சிவப்புகழ் | 0 | 6 | 0 |
| குசேலமாமுனி சரித்திரம் திருப்புகழ் காவடிசசிந்து வர்ன்மெட்டு | 0 | 3 | 0 |
| ஞான சவுந்தரி திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு | 0 | 3 | 0 |
| சரசாங்கி ஜவளி முதற்பாகம் | 0 | 2 | 0 |
| சூடிகொடுத்த நாச்சியார் என்னும் கோதை கல்யாணம், ஆண்டாள் பரிணயக் கும்மி | 0 | 3 | 0 |
| சிறுத்தொண்ட நாயனர் திவ்ய சரித்திர திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு அடங்கியது | 0 | 2 | 0 |
| பாரிஜாத நாடக கும்மியும், ஸ்ரீரங்கநாதன் சந்நிதியில் திருட்டுப்போன கும்மியும் | 0 | 2 | 0 |
| ஆர். நடராஜ ஆசாரி. கே. கே. தங்கவேலுபிள்ளை இவர்கள் பாடிவரும் சுதேச கள்ளன் பாட்டு | 0 | 2 | 0 |
| நாடகங்களில் விகடம் சில்லரை வேஷங்களில் சிலது எல்லாரும் சொல்லும் நல்ல சில்லரை பாட்டுகளும், விதூஷக ஆக்டும் உண்டு. | 0 | 4 | 0 |
| பரர்வி இந்துஸ்தான் பதங்களும் அடங்கிய ஸ்ரீமகாவிஷ்ணு பஜனை கீர்த்தனை திருப்பகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு | 0 | 3 | 0 |

ஸ்ரீமகா பாகவதத்தில் துலாபாரநாடக கும்மியும்
ஸ்ரீ ரங்க நாச்சியார் வசந்த உற்சவ கும்மியும் 0 2 0
சக்குபாய் சரித்திரம் டிராமா 0 8 0
குசேல சரித்திரம் டிராமா 0 8 0
பாகவத திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 2 0
பரங்கிப்பேட்டை—டி—ஆர்—சம்பந்தா என்பவரால் இயற்றிய
இந்துஸ்தான் பார்ஸி சதாரம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 2 0
மகா மாக்ஷிமை தங்கிய கீர்த்தி சிங்கமென்னும் கண்டிராஜன் திரு
ப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 4 0
சக்குபாய் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 3 0
ஸ்ரீ கண்ணன் யமுனையில் பின்னமரத்தில் நடத்திய கோபிகா வஸ்
திராபரணம் கொம்மி 0 3 0
அதி பராக்கிரம சாலியாகிய மதுரைவீரன் திருப்புகழ் காவடிச்சிந்து
வர்னமெட்டு 0 3 0 பவளக்கொடிசரித்திரம் டிராமா 0 3 0
நளச்சக்கிரவர்த்தி திருப்புகழ் காவடிச்சிந்து (முதல் பாகம்) 0 2 0
ஷை இரண்டாம் பாகம் 0 2 0
அதிரூப அமராவதி திருப்புகழ் காவடிச்சிந்து 0 3 0
திருத்தணிகை சிவசுப்ரமண்யர் கீர்த்தனை திருப்புகழ் வர்னமெட்டு 0 2 0
புதிய கலியாணவாழ்த்து ஏசல் ஓடம் லாலி ஊஞ்சல் அடங்கியது 0 2 0
சிட்டிசேலைக்கும் நாட்டு சேலைக்கும் சண்டை 0 1 0
நாகூர் ஆண்டவர் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 2 0
விநாயகர் கீர்த்தனை திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 2 0
சுப்பிரமணியர் கொத்து என்னும் அட்சரமாலையும், சத்துரு சங்
காரமாலையும், சத்துருசங்கார திருப்புகழும், விநாயகர், சுப்பிர
மணியர், சிவம், சிவகாமசுந்தரி, விஷ்ணு இம்மூர்த்திகளி னர்ச்
சனைக் குரிய அஷ்டோத்திரமும், முருகேசர் பதிகமும் அடங்கி
யிருக்கிறது. 0 3 0 இரியோதனன்மோகம் நாவல்ஸ் 0 4 0
கற்புக்கரசியென்னும் வெகு விநோத விரத பூஷனி டிராமா 0 5 0
வள்ளி சுயவரம் யென்னும் டிராமாசரித்திரம் 0 3 0
அண்ணாமலைரெட்டியார் காவடிச்சிந்து 0 2 0
நீலிக்கதை 0 4 0 பண்டரி கீர்த்தனை 0 4 0
ஆறுபாவை ஒக்கபிலேரி 0 4 0
கூலிக்குத் தாலிகட்டினகதை 0 4 0
ஏகாதசி மகாத்மியம் என்கிற உருக்மாங்கத சரித்திரத் திருப்புகழ்
காவடிச்சிந்து வர்னமெட்டு 0 4 0
சீகாளத்திபுராணம்—வசனம், காளத்திக்ஷேத்திரத்தில் பக்தி முக்தி
யடைந்தவரின் சரித்திரங்களின் ஐதீக படங்களுடன் உண்டு 0 6 0
திருயோகம் சாமிநாதசுவாமி காவடி நொண்டிச்சிந்தும், மாரியம்மன்
காவடி நொண்டிச்சிந்தும் உள்ளது 0 1 0
மாசிலாமணி உபாத்தியாயரியற்றிய சிறுத்தொண்டநாடகம் 0 8 0
வல்லாளமகாராஜன் திருப்புகழ் காவடிச்சிந்து 0 2 0

இன்னும் தங்களுக்கு தேவையாய் இருக்கும புஸ்தகங்களை விபரமாய் எழுதினால் உடனே அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பெ - ஆறுமுக முதலியார்.

நெ 4, பெருமாள்கோயில் தோட்டம் 2-வது சந்து, சென்னை

முரஹரி பிரஸ், சென்னை.